ஆண்டவன் துணை.

பிஸ்மில்லா ஹிர்றகுமானிர்றஹீம்

பொட்டல்புதூர் என்று பெயர்வழங்கிய
புதுவைமா நகரில் மகிமையுடன் வாழும்

# மூகையதீன் ஆண்டவர்பேரில்

ஷை யூர்
சங்கரலிங்கக்கவிராஜமூர்த்தியவர்கள் குமாரர்
**கலைக்கோட்டிலிங்கக் கவிராஜமூர்த்தி**
அவர்கள் இயற்றிய

# பஞ்சரத்நப்பாமாலை

ஷை ஆண்டவர்கள் பள்ளிவாசல் அக்தாரவர்கள்
மக-ா-ா-ஸ்ரீ மகாகனம்பொருந்திய
**சைய்யதுபீர்ஷா மூகையதீன்காதிரி**
**பீர்ஷாதாஸிபுகத்துல்லா ஸாகிப்**
இனும்தார் அவர்களுக்கும்
ஷை பள்ளிவாசல் மானேஜா பாப்பாங்குளம்
**மக-ா-ாஸ்ரீ பெரியபிள்ளையவர்களுக்கும்**
கருத்துக்கிணங்கியதாய்
பொட்டல்புதூர்
மக-ா-ா-ஸ்ரீ சாய்புலெப்பையவர்கள் என்ற
**விஸ்வா அப்துல்றகுமான் லெப்பை**
அவர்களும்
ம-ா-ா-... நாகூர்யாவாமூகையதீன்
...யவர்களுமாகிய
...வண்டுகோளின்படி
...மதிவிலாஸம் பிரசில்
...ப்பட்டது.
...16

Q7:31
N18
179446

ஆண்டவன் துணை

பிஸ்மில்லா ஹிர்றகுமானிர்றஹீம்

பொட்டல்புதூா என்று பெயர்வழங்கிய
புதுவைமா நகரில் மகிமையுடன் வாழும்
**முகையதீன் ஆண்டவர்பேரில்**

ஷை-யூா
சங்கரலிங்கக்கவிராஜமூர்த்தியவர்கள் குமாரர்
**களக்கோட்டி லிங்கக் கவிராஜமூர்த்தி**
அவர்கள் இயற்றிய

# பஞ்சரத்நப்பாமாலை

ஷை ஆண்டவர்கள் பள்ளிவாசல் அக்தாரவர்கள்
மக-ா-ா-ஸ்ரீ மகாகனம்பொருந்திய
**சையிதுபீர்ஷா முகையதீன் காதிரி**
**பீர்ஷாதாஸிபுகத்துல்லாஸாகிப்**
இனம்தார் அவர்களுக்கும்
ஷை பள்ளிவாசல மானேஜா பாப்பாங்குளம்
மக-ா-ாஸ்ரீபெரியபிள்ளையவர்களுக்கும்
கருத்துக்கிணங்கியதாய்
பொட்டல்புதூர்
மக-ா-ா-ஸ்ரீ சாயபுலெப்பையவர்கள் என்ற
**லஸ்வா அப்துல்றகுமான் லெப்பை**
அவர்களும்
ம-ா-ாஸ்ரீகா நாகூர்வாவா முகையதீன்
லெப்பையவர்களுமாகிய
இருவர்களின் வேண்டுகோளின்படி

திருநெல்வேலி காந்திமதிவிலாஸம் பிரசில்
பதிப்பிக்கப்பட்டது.
1918

ஆதியே துணை.

பிஸ்மில்லாஹிர்றகுமானிர்றஹீம்

காப்புகள்.

## நேரிசை வெண்பா.

பொன்போலுந் திவ்ய புதுவை நகர் வந்தமர்ந்தீர்
என்போலுந் தொண்டரொலாமீடேறப்-பொன்போல
மற்றேது லோகமெங்கள் வள்ளால் முகையதீன்
பற்றேயெங்கட்குன்பதம்.

திருவளர்புதுவையம் பதிவாழ் செகதிறைபுண்ணியர்
மீது. மருவளர் பஞ்சரத்தினமாலை வழுத்த முன்னவ
னிருபதமும், தருவளர் மதினநகருறை யிறசூல் சல்
லலாவெனுமவர் பேரர், இருபதாம்புயமுந் தருமிகு
பரமுமெம்மனோரவர்க்கு நிண்ணயமே.

## பஞ்சரத்தினம்

### ஆசிரிய விருத்தம்.

1 எங்கெணு நிறைந்த பரிபூரணானந்தமாய்
யாவுமா யல்லவாகி
எவ்வுயிர்த்திரளுமா யவ்வுயிர்க்குயிருமா
யிலகு சமயங்கடோறும்
தங்கிவளர் பொருளுமாய்ச்சமயங் கடந்ததாய்
தரணிதனி லன்பரையெலாங்

தன்னடிமையாய்க்கொண்டுமென்மேலுங்காக்கின்ற
தாரகக் கருணை முதலே
கங்குல்பகலறநின்ற நிஷ்கள சொரூபமே
கருதரிய ஆனந்தமே
கழறுலகெலாம் பரவு கஸ்தூரி வாசமே
காரண விசேஷமேரே
பொங்குமூவாசையை யகன்றுயர் நிராசையாம்
புனிதமயமான பொருளே
புதுவைநகர் வளர்பள்ளி வாசலுள்ளமர்ந்தருள்
போதமே கருணை முகிலே.

2. தன்னிகரிலாத நின் சன்னிதியில் வந்துனது
தாழ்பணிந்துருகிடாத
தன்மையேனெனினுமித் தரணியோர் நின்புகழ்
தான்சொலக் கேட்டுவந்து
சென்னியின் மீதிலிரு கைகளுங்கூப்பியே
சேவிக்க யானறிகிலேன்
செவியினுலாகிலும் நின்பெருமை கேட்கிலாத்
தீமையேனுகி ஐயோ
மன்னுபுகழ் நின்னடியை உள்ளத்திலெண்ணுது
மருவு மூவாசை வைத்து
மனதுஞ் சலித்தனன் இனியேனு நின்னடி
வழுத்தநல் வரமருளுவாய்
பொன்னிலகு மணிமேடை மாடகூடத்தில் வாழ்
பூதலத்தோ ரிறைஞ்சும்
புதுவைநகர் வளர் பள்ளி வாசலுள்ளமர்ந்தருள்
போதமே கருணை முகிலே.

179446
ஒ7'4
118

3. காலங் கடப்பாது தொழுதுவிழுவர்குனது
கருணைப்பிரவாக அருளைக்
கருதாத மூடர்கள் பெரியோர்கள் தாமென்று
கண்டவர்கள் தெண்டனிடவே
கோலஞ் சமைந்துவரு வாரதை யென்சொல்வேன்
கோடியிற் கூடு மோர்சாண்.
கும்பிக் கிரைதேட லன்றிவேறில்லையாதல்
குணங்குடி மேவும் அருளாம்
சீலங்கள் பூண்ட மஸ்தான் சாய்பு அடியவர்
தென்மொழிப் பாவினாலே
சிருலவு நின்புகழ் மகிமையை யுரைத்ததைச்
செப்பரிய நாயினேனைப்
போலுமன்பில்லார்கள் புவியிலில்லை யாதலால் பிழை
பொறுத்து ரக்ஷிக்கவேண்டும்
புதுவைநகர் வளர் பள்ளி வாசலுள்ளமர்ந்தருள்
போதமே கருணை முகிலே.

4. காதலோடு பேசுவார் தங்களின் மதத்தையே
கருதுவார் முக்ய ஜீவ
காருண்யமின்றிமெய் ஆரணமும் ஓதுவர்நின்
கஸ்தூரி மூலமறியார்
சாது சங்கத்திலொடு கூடிமகிழாதுவீண்
தர்க்கந்தொடுக்க அறிவார்
சமய கோட்பாடெலாம் அறிந்து சமரசமாகி
சற்குருவினருளினாலே
ஓதரிய பொருளுண்மை நிலையறிந்தாலன்றி
உன் மகிமை காண அரிதே

ஊருக்கெலாம்சாஸ்திரம் சொலும்பல்வி வெட்ப
மூளகூழில் வீழ்ந்த கழுதைபோல்
பூதலமாயையாற் கெட்டசேய் தன்னை நின்
பொன்னடி வணங்க அருள்வாய்
புதுவைநகர் வளர்பள்ளி வாசலுள்ளமர்ந்தருள்
போதமே கருணை முகிலே.

5. எல்லாமு நீ யாயிருக்க யானென்னு மோ
ரியல்பெனக் கேதையனே
என்னை யான் பாராது மூவாசை முதலான
யெவற்றிலும் பற்றியலையுங்
கல்லாத நெஞ்சினேன சிந்தைசேர் மலமாயை
கன்மமே நினைவு கொண்டு
கனவிலும் பொய்யுலக வாழ்வையே சதமென்று
காலம்வீண் கழித்த யெளியேன்
சொல்லரிய மவுன நிலை தனில்மருவும் மெய்யனே
தூயனே கருணை வாழ்வே
சுத்தபர முத்திவாழ் நித்தியானந்தனே
தொண்டர் புகழ் பேரின்பமே
பொல்லாத சேயெனினும் அறியாமை யாவையும்
பொறுத்து ரக்ஷிக்கவேண்டும்.
புதுவைநகர்வளர்பள்ளி வாசலுள்ளமர்ந்தருள்
போதமே கருணை முகிலே.

பஞ்சரத்தினம் முற்றிற்று.

குறிற்சந்த விருத்தம்.

தஞ்சமென் றுனைச் சார்தமியேனன்பாய்ப்
பஞ்சரத்தினப்பாமாலை செய்ததை
இஞ்சொலாக நின்னிதய மகிற்கொண்டு
அஞ்சலமுலைகயதின் அரசே அருள்வாயே.

முற்றிற்று.

---

றகுமான் துணை.

சாற்றுக்கவிகள்.

வீரவநல்லூர் மக-ா-ா-ஸ்ரீ ப. பீர்முகியயிதீன்
புலவரவர்களியற்றிய
ஆசிரிய விருத்தம்.

விதுவைமுனம் பகப்புரிந்து பொருந்து
நபி திருப்போர் வேதவித்தாம்
புதுவை நகர் முகிய்யிதீன் பஞ்சரத்நப்
பாமாலைபுகன்று தந்தான்
சதுர்மறையும் நன்குணர் சங்கரலிங்கக்
கவிராஜர் தவத்துதித்த
மதிபுகழு சிதிவளமுங் குலவுகளைக்
கோட்டிலிங்க மகிபன்றானே.

## திருநெல்வேலி கந்தசுவாமிக்கவிராஜர்

அவர்கள் இயற்றிய

### ஆசிரிய விருத்தம்.

சீரேறும் புதுவைநகர் முன்வாழ்ந்த சங்கரலிங்க
கவிராஜ சீமான்றன்சேய்
ஏரேறுங் கனிக்கோட்டிலிங்க திருநாமபுகழ்க
கவிராஜ இனியோனிந்தப்
பாரேறு முகையதீன் ஆண்டவன்மீ தன்பினோடு
பாமாலையாய்ச்சொன்ன பஞ்சரத்நத்
தாரேறும் புகழ் கவியைப் படிப்பவருங் கேட்பவருந்
தாரணியில்மிகுதிநற் றவம்பெற்றோரே.

---

## திருநெல்வேலி பெருமாள் வடக்கு ரதவீதி

## ஆதிமூர்த்திக் கவிராஜர் அவர்கள்.

### ஆசிரியப்பா.

பூமேவு தண்புனற் கழனியிற் சூல்கொண்டு
பொலிசங்கினங்களாதப்ப
பொருகயற் குவம்வெருவி விண்ணிடைப் பாய்ந்து
வளை பொற்கொடி யெனத் தயங்குங்
காமேவு ருமந்திச் சார்பிலகு புதுவைநகர்
கவிராஜசங்கரலிங்கம்
கனமுத்தமிழ்க் கரைகண்டவன் சேயான
கவிராஜகனிக்கோட்டிலிங்கம்
பாமேவு முகையதீன் ஆண்டவன் மீதினிற்
பாடியபஞ்சரத்நப

பாமாலை தனையன்பர் புகழ்ந்து கொண்டாடுவர்
-சீரிய மகிமையுளதாய
மாமேவு இனிய அப்பா மாலை நன்றென
வானுலகர் செப்புமதனை
மனதாகத் தனுதினம் பாடித்துதிப்பவர்கள்
வாழ்கைபெற்றுய்குவாரே

---

தென்காசித்தாலூகா சுரண்டைமாநகர்
ஹிந்துஸ்கூல் ஹெட்மாஸ்டரும்
ஸ்ரீ முருகபிரான் திருவடிக்கன்பருமாகிய
ஆ. கி. நாராயணபிள்ளை அவர்கள் இயற்றியது

1. செந்நெல்விளை கழனிவளஞ் சூழ்வதோடு
திருமகளுங் குடிகொண்டு சீருற்றோங்கும்
தென் புதுவை நகரில் முன் வாழ்ந்தோனித்தச்
செகம்புகழ் சங்கரலிங்க ஜெயகவிஞன்ற

2. இன்புள்ளசெய் களக்கோட்டிலிங்க நாமன்
இறைவன்றாள் தொழுதிதய மென்றுளான்
நன்புகழ்சேர் முகையதீன் ஆண்டவர்மேல்
நவின்ற பஞ்சரத்னப் பாமாலை நன்றே.

3. கஞ்சமலர்ப் பதமுடையோன் முகையதீன்மேல்
களக்கோட்டிலிங்கநாமக் கவிஞன் சொன்ன
பஞ்சரத்நப்பாமாலை தனையன்போடும்
பாடுவோர் கேட்பவருரை பகருவோர்கள்.

4. குஞ்சரமேற் பவனிவரும் அரசர்போலக்
குவலயத்திலின்புற்றோர் குறைவுமின்றி
இஞ்சொலுள சீலர்களாய்ப் புவியில் வாழ்ந்து
யென்றுமுயர் பெருவாழ்வை யெய்துவாரே.

---

* மக-ா-ா-ஸ்ரீ களக்கோட்டிலிங்கக் கவிராஜமூர்த்தி அவர்களால் இன்னும் சில நூல்கள் கூடிய சீக்கிரத்தில் அச்சிட்டு வெளிவரும்.